செய்தி வெளியீடு எண்: 686 நாள்: 13.10.2017

**இந்து சமய அறநிலையத்துறை –செய்தி வெளியீடு**

**திருக்கோயில்கள் மேம்பாட்டுக்கான அரசு அறிவிப்புகள் பணிகளின் முன்னேற்றம்**

**இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அலுவலர்கள் கூட்டத்தில் ஆய்வு**

==============================

சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் இன்று (13.10.2017) இந்து சமய அறநிலையத் துறையின் சீராய்வுக்கூட்டம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது, திருக்கோயில்களின் மேம்பாட்டுக்காக சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்தும், சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இதர திட்டப்பணிகளின் முன்னேற்றம், திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை பராமரித்தல், நியாய வாடகை நிர்ணயம் செய்தல், திருமண மண்டபங்கள் பராமரிப்பு, புதிய திருத்தேர் பணிகள், திருக்குளங்கள் சீரமைப்பு, சிலைகள் பாதுகாப்பு, பணியாளர்கள் நலன், கல்வி நிறுவனங்கள் செயல்பாடு மற்றும் அவற்றிற்கான அடிப்படை வசதிகள் மற்றும் மேம்பாடுகள் குறித்தும், திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக திருக்கோயில்களில் நடைபெற்றுவரும் நவீனக் கழிவறை, குளியல்அறை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப்பணிகள் நடைபெறுவதை அலுவலர்கள் கண்காணித்து உரிய காலத்தில் பணிகளை நிறைவேற்றி பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறும், திருக்கோயில் குளங்களுக்கான வரத்து வாய்க்கால்களைச் சீரமைத்து மழை நீர் சேகரிப்பை கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

மேலும் கோயில்களின் விமானங்கள், கோபுரங்கள், திருமதில்களில் வளரும் செடிகளை வளர விடாமல் தடுக்கும் வகையிலும் மற்றும் இவ்விடங்களில் சேரும் இதர குப்பைகளை அவ்வப்போது அகற்றவும் அறிவுறுத்தினார். கோயில் பிரகாரங்களில் வழிகாட்டும் குறியீட்டுப் பலகைகள் வைக்கவும் அறிவுரை வழங்கினார். கோயில் சொத்துகளுக்கான வாடகை, வரி பாக்கிகளை நிலுவை இல்லாமல் வசூலிக்கவும், கோயில் சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். திருத்தேர் மற்றும் இதர திருப்பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்ற வேண்டும். திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் இடையூறின்றி சுவாமி தரிசனம் செய்யவும் அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தர அலுவலர்கள் முனைப்பாக பணியாற்ற வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் *திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.*

கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமதி ஆர்.ஜெயா இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் (பொது) ந. திருமகள், கூடுதல் ஆணையர் (திருப்பணி) மா.கவிதா, கூடுதல் ஆணையர் (விசாரணை (பொ) அர.சுதர்சன் மற்றும் அனைத்து மண்டல இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், பொறியாளர்கள், தணிக்கை அலுவலர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**